பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5.00 Registered as a News Paper in Sri Lanka பக்கம் எட்டு

# வலம்புரி
# VALAMPURI

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும்தங்க நகைகளுக்கு
சாரங்கா
நகைமாடம்
177/4 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 2480

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 4 செவ்வாய்க்கிழமை (20-8-2002) தொலைபேசி 3378 ஒலி 244

## நிறைவேற்று ஜனாதிபதியின்
# அதிகாரத்தைக் குறைக்கா விட்டால்
# பாராளுமன்றை கலைக்க வேண்டும்

## பிரதமர் - மந்திரிகள் தீர்மானம்

(கொழும்பு)

**ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை நீக்கும் வகையிலான அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்படாவிடின், பாராளுமன்றப் பொதுத் தேர்தலை நடத்துவதென்று ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

அடுத்த மாதம் முதல்வாரத்தில்அரசமைப்புதிருத்த நகலை அரசாங்கம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பது என்று முடிவு செய்துள்ளது.

அடுத்த மாதக் கடைசி வாரத்தில் அரசமைப்பு திருத்தத்திற்குரிய சட்டபூர்வமான அங்கீகாரத்தை பெறுவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அரசியல் யாப்பு திருத்தத்தைக் கொண்டுவந்து, ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைப் பறித்தெடுப்பதன் மூலமே, அரசாங்கத்தின் பதவிக்காலத்தை நீட்டி, ஆட்சி ஸ்திரநிலையை ஏற்படுத்த முடியுமென்று ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் கூடி ஆராய்ந்து முடிவு செய்துள்ளனர்.

இத்தகைய முடிவை அண்மையில் திருகோணமலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய அமைச்சர்கள் கருஜெயசூரிய, பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், திலக்

(8ம் பக்கம் பார்க்க)

## கடல் மார்க்கமாக 4படகுகளில்
# வாகரையிலிருந்து வன்னிக்கு 50 புலிஉறுப்பினர்கள் சென்றனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையிலிருந்து 50விடுதலைப்புலி உறுப்பினர்கள் படகுகள் மூலம் நேற்று முல்லைத்தீவுக்குச் சென்றடைந்தனர்.

நேற்றுக்காலை 7 30மணி

நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் பயணம்செய்தனர்.

வாகரையிலிருந்து புறப்பட்ட படகுகள் திருகோணமலை மூதூர் இறங்குதுறையில் தரித்துச்சென்றுள்ளன.

வரத்து வசதிகருதியேஇவ்ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது

இதேவேளை வாரத்தில் இரண்டுதடவைகள் இந்தப் படகுச் சேவைகள் இடம்பெறுமென அறிவிக்கப்பட்

## நல்லூரில் பிரதிஷ்டை செய்தவரைநாய்கடித்தது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயச்சூழலில் காணப்படும் கட்டாக்காலி நாய்களினால் ஆலயத்திற்குவரும் பக்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலைவேளை ஆலயத்தில் அங்கப்பிரதிஷ்டை செய்துகொண்டிருந்த இளைஞர்ஒருவர் நாயின்கடிக்கு இலக்காகி காயமடைந்தார்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த சி.சசிக்காந் என்பவரே காயமடைந்தவராவார்.

(8ம் பக்கம் பார்க்க)

## 500பேர் அடங்கிய குழு வலி வடக்குக்கு விஜயம்

### பாடசாலைகளை இயக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கில் உள்ள தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தந்தை செல்வா ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றைமீள இயக்குவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை நேற்று அப்பகுதிக்குச் சென்ற குழுமேற்கொண்டது.

மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமகாராசா, பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வலிகாமம் வலய உதவிப் கல்விப்பணிப்பாளர் வி. இராசையா, இரு பாடசாலைகளினதும் அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் பழைய மாணவர்கள்மற்றும் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதிகள் அடங்கலாக சுமார் 500பேர் இக்குழுவில் அடங்கியிருந்தனர்.

இதேவேளை பாடசாலைச் சமூகம் தவிர்ந்த ஏனையோ

(8ஆம் பக்கம் பார்க்க)

...யாவில் வாகரையிலிருந்து புறப்பட்ட நான்கு படகுகளிலும் தலா ஒவ்வொரு யுத்த ... திருகோணமலை மாவட்டத்தில் உள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களின் போக்கு ... டுள்ளது.

முல்லைத்தீவுக்கும்

(8ம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் அபிவிருத்திக்கு உதவ சர்வதேச நாடுகள் முன்வந்துள்ளன

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுவருகின்ற முன்னேற்றமும் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பொருளாதாரக் கொள்கைகளும் உலகநாடுகளின் கவனத்தை இலங்கைமீது திருப்பியுள்ளதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெறும் வர்த்தகக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருப்பதனால் சர்வதேசநாடுகள் நாட்டின் மீன்பிடி, விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளை விருத்தி செய்வ

(8ம் பக்கம் பார்க்க)

# மட்டு. மயிலம்பா வெளியில் புலிகளின் விபரங்களை சேகரிக்கும் படையினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மயிலம்பா வெளி பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் விபரங்களை இராணுவத்தினர் சேகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம்தொடக்கம் இவ்விபரங்களை சேகரிக்கும் நடவடிக்கைகளில் மயிலம்பா வெளி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் பெற்றோர்கள், சகோதரர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஆகியோரின் விபரங்களையும் படையினர் திரட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்நடவடிக்கையானது தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் இடம்பெறும் யுத்த நிறுத்த மீறல் என அப்பிரதேசத்தை

(8ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கடற்பயணத்தில் பயண ஒப்பந்த மீறலாம்

## கடற்படையினர் முறையீடு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடல்வழிப் பயணம் பயண ஒப்பந்தத்தை மீறும் செயல் என்று, கடற்படையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் முதற்தடவையாக முல்லைத்தீவில் இருந்து மட்டக்களப்புக்கு கடல்வழியாக பயணம் மேற்கொண்

(8ம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகத்தில் தமிழ் - முஸ்லிம் கட்சிகளுக்கும் இடம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகசபையில் தமதுபெரும்பான்மையை உறுதிப்படுத்தும் வகையில் 51வீதமான உறுப்பினர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்பார்ப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப்புலிகள் ஏற்க சம்மதம்தெரிவித்துள்ளதுடன் அதில் தமது பெரும்பான்மை பலத்தையும் ஏற்படுத்தஅவர்கள் விரும்புவதாக அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இடைக்கால நிர்வாகசபையில் தமிழ் முஸ்லிம் கட்சிகளுக்கும் இடமளிக்கப்படுமென்றும்,

கடந்தகால பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கு பகுதி தமிழ்க்கட்சிகள் பெற்றவாக்குகளின் அடிப்படையில் கட்சிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையில் அங்கத்துவம் ஒதுக்

(8ம் பக்கம் பார்க்க)

# ஊழியர் சேமலாப நிதி உரியவர்களுக்கு கிடைக்கும்

## தொழில் அமைச்சர்

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியினை உரியவர்களுக்கு அவ்வத்திணைக்களங்கள ஊடாக வழங்குவதே அரசாங்கத்தின் கடமையாகும் என்று தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு இந்நிதியத்திலுள்ள பணத்தினை செலவு செய்ய முனைந்து வருகிறது என வெளியான செய்தியினை தொடர்ந்து, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கமல்ராஜபக்ஷா இது தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று நேரடியாக எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துதெரிவிக்கையில்; நாட்டின் ஒவ்வொரு திணைக்களத்தினதும் சேமலாப நிதி தொடர்பான நிர்வாகப் பொறுப்பை தனதுஅமைச்சே மேற்கொண்டுவருவதாகவும், அந்நிதி உரியவர்களுக்குவழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (உ-8)

# வெஸ்டன் யூனியன் பணப்பரிமாற்ற நிலையம் நேற்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

வெஸ்டன் யூனியன்-பணப்பரிமாற்றல் சேவை மற்றும் பெடெக்ஸ்வானூர்தி ஊடாக பொருட்கள் அனுப்பும் சேவை நிலையம் நேற்று ஸ்ரான்லி வீதியில் உள்ள மக லட்சுமி கட்டடத்தில், பொது முகாமையாளர் உத்தக்க தென்னக்கோனால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.மக்களின் தேவைகளை துரிதமாக நிறைவேற்றும் சேவையுள்ளத்தோடு இங்கு திறக்கப்பட்டுள்ளஇந்த நிலையம் ஊடாக பணப்பரிமாற்றம் மற்றும் பொருட்பரிமாற்றம் என்பவற்றைஉள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

# நாரந்தனை தாக்குதலைக் கண்டித்து ஊர்வலம்

(திருநெல்வேலி)

ஊர்காவற்றுறை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நாரந்தனை கிழக்கில் உள்ள தவறணையில் புகுந்து கடந்த வெள்ளியன்று இனந்தெரியாதோர் புரிந்த அட்டகாசத்தைக் கண்டித்து நாளை புதன்கிழமை தீவகத்தில் கண்டன ஊர்வலம் ஒன்று இடம் பெறவுள்ளது.

பனை - தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. (உ-43)

# ஸ்ரீ முருகன் பாமாலை வெளியீடு நாளை

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தேர் உற்சவ தினமான நாளை ஸ்ரீ முருகன் பாமாலைவெளியீட்டு நிகழ்வு காலை 9.00மணிக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் க.மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பாமாலையை தமிழ் தேசியகூட்டமைப்புப்பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் வெளியிட்டு வைப்பார். (உ-3)

# யுத்தத்தின் கொடூரம் யாழ்ப்பாணத்து கல்வியைப் பெரிதும் பாதித்துள்ளது

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த இக்கட்டுரையாளர் பத்மா எதிரிசிங்க சண்டே ஒப்சேவர் இதழில் ஆங்கிலத்தில் வரைந்த கட்டுரையின் சுருக்கிய தமிழ் வடிவம்.

அஜித் சமரநாயக்கா தனது 'யாழ்ப்பாண தினக் குறிப்பை' (Jaffna Diary) இந்த வரிகளுடன் முடிக்கிறார். 'திடீரென கிழக்கில் சூரியன் பிரகாசமாக எழுகிறான் ரோஜா நிறத்திலிருந்த வானம் அதிகாலையில் சிவப்பாக மாறுகிறது அதே பரந்த வானத்தில் பூரண சந்திரன் வெளிறியிருந்தாலும் தெளிவாகத் தெரிகிறது'

1995ம் ஆண்டு மார்ச் மாதம் யுத்த நிறுத்த காலப் பகுதியில்எழுதப்பட்ட யாழ்ப்பாண தினக்குறிப்பிலிருக்கின்ற இந்த வர்ணணையை ஒரு பலவீனமான முறையில் நான் உதாரணத்துக்கு எடுத்திருந்தாலும் அதே பரந்து விரிந்த வானத்தை சில நாட்களுக்கு முன்பு நான் யாழ்ப்பாணத்தில் கண்டேன்.

தற்போதைய யாழ்ப்பாண சூழ்நிலை பெரும்பாலும் கூடுதலாக முக்கியமான கருத்துக்களை உத்தரவாதமளிப்பதற்கு ஏதுவாகவில்லை இது கடுந்துன்பத்தைக் கொடுப்பதாக காணப்படுகிறது. அஜித் சமரநாயக்கா கூறியது போல யாழ்ப்பாணத்தில் மாலை நேரத்து வானம் முக்கியமாக பெரியமாதா ஆலய முகப்பிற்கு மேலாக சிவந்த வானம் அழகாக தெரிகின்றது. ஆனால் இது கடந்த வருடங்களில் இந்த நகரத்தில் நடந்த பயங்கர நிகழ்வுகளை சொல்வதற்கு போதுமானதாக இல்லை.

யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான வீடுகள் கூரையற்று இருக்கின்றன. அத்துடன் தென்னை மரங்களும் பனைகளும் தங்களது தலைகளை இழந்திருக்கின்றன.

நான் எனது குழுவிலிருந்து விலகி தனியே சென்றபோது ஒரு தம்பதியை கண்டேன் அவர்களுடன் உரையாட விரும்பி சென்.பற்றிஸ் கல்லூரிக்கு செல்வதற்கான பாதையை கேட்டபோது கணவன் தனக்கு ஆங்கிலம் தெரியாதென்று சொன்னார். ஆனால் அவரது மனைவிக்கு சிங்களம் தெரிந்திருந்தது நான் அதே கேள்வியை திரும்ப கேட்டபோது அவர் தோடுகள் அணிந்திருந்த தனது காதைக்காட்டி தன்னால் நான் சொல்வதை கேட்க முடியாதென்று சொன்னார் 'குண்டு வெடிப்புக்கள் எனது காதை செவிடாக்கியிருக்கிறது. எனது காதுகள் இப்பொழுது தோடுகள் மட்டும் அணிவதற்கே பயன்படுகிறது என்று தூயசிங்களத்தில் வருத்தம் தோய்ந்த புன்னகையுடன் கூறினார். யாழ்ப்பாணத்தில் இவ்வாறு பலர் தொடர் குண்டு வெடிப்புக்களால் கேட்கும் திறனை இழந்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் நான் சந்தித்த தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் மிகவும் நற்பண்புடையவர்களாக இருந்தார்கள். ஆனால்அங்கு ஒரேஒருநபர்மாத்திரம்மிகவும் கடுமையானவராகஇருந்தார்

தமிழில்; உருவில் ம. மயூரன்

அவர் ஒரு சிங்கள இராணுவ லெப்ரினன்ட் சோதனைச் சாவடியொன்றில் சிங்கள இராணுவ அதிகாரிகளுடன் அளவளவிக் கொண்டிருந்த போது அந்தப்பகுதியிலிருந்து அவர் வந்தார் சாதாரண உடையிலிருந்த அவர் எனது கையிலிருந்த கமெராவை கண்டவுடன் சோதனைச் சாவடியை படமெடுக்க வேண்டுமென்றால் தன்னுடைய அனுமதியை பெற வேண்டுமென்றார்; அவரை யாரென்று நான் கேட்கும் முன்பே அவர் கடுமையான குரலில் நான் தான் லெப்ரினன்ட்.... பெரேரா என்றார். உண்மையில் நான் அவரை குனிந்து வணங்க வேண்டும் என அவர் எதிர்பார்ப்பது போலிருந்தது.

ஆனால் இதுமிகவும் ஒரு சாதாரண விடயமே ஏனென்றால் எத்தனையோ அப்பாவிப் பொதுமக்கள் இந்க நகரில் படுகொலைசெய்யப்படும் மனித அழிவுகளுக்குள்ளாக்கப்பட்டும் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுமிருக்கின்றது; பாடசாலை அதிபர்களை கேட்டபோது 1995ம் ஆண்டுகடுமையான விமானத்தாக்குதல்கள் இடம் பெற்றபோது பாடசாலைகள் மாதக்கணக்காகமூடப்பட்டிருந்ததாக சொன்னார்கள் போரால்கல்வி நடவடிக்கைகள் பாரியளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள்கூறினார்கள் பெருமளவு சிறுவர்கள் இந்தியாவுக்கும் வன்னிக்கும் சென்றுவிட்டதாக கூறினார்கள் இவ்வாறு வன்னியிலிருந்து வந்தஐந்து சிறுவர்களை நான் சந்தித்தபோதும் மொழிப்பிரச்சினை காரணமாக அவர்களுடன் உரையாடமுடியாமல் இருந்த அவர்கள் 13வயதிலிருந்து 17வயதிற்குட்பட்டவர்களாக இருந்தார்கள் ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் வன்னிக்காட்டில் அவர்கள் வாழ்ந்த நம்ப முடியாத வாழ்க்கை முறை பற்றி கேட்டறிந்தேன் சில வேளைகளில் நாட்கணக்காக பட்டினி கிடந்ததாகவும் அவர்கள் கூறினார்கள் அண்மையில் தான் அவர்கள் பாடசாலைக்குத் திரும்பியிருக்கின்றார்கள்இப்பொழுது பயமில்லையாஎன நான் அவர்களைக் கேட்டேன் மொழிபெயர்ப்பாளர் அவர்களிடம் இக்கேள்வியை கேட்டார் அவர்கள் சிரித்துக்கொண்டேவெவ்வேறு பதில்களை தமிழில் சொன்னார்கள் அவர்கள் என்னசொல்கின்றார்கள் என நான் கேட்டேன் அவர்கள் சமாதானத்துக்காக வேண்டுதல் செய்வதுடன் சமாதானம் வருமெனநம்புகிறார்கள் அப்போதுதான் அவர்கள் கடந்தகாலங்களில் ஏற்பட்ட பயங்கர அனுபவங்கள மீண்டும் ஏற்படாது எனவும் தங்களுடைய படிப்பைதொடருவதற்கு சமாதானம் வேண்டுமெனவும் விரும்புகிறார்கள் என்றார். நான் அவர்களைப் பார்த்தேன் இந்தச்சிறியவயதில் அவர்கள் எவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கின்றார்கள் நான் கடவுளைபிரார்த்தித்தேன்

தெய்வீகசக்திகளின் அருளால் இந்தக்கொடுமையான யுத்தம் தொலையட்டும் அப்போதுதான் எங்களுடைய இந்தப் பிள்ளைகள் தங்களுக்குரிய உன்னதமானநிலையை அடையலாம் சிலவேளைகளில் நான் கூடுதலாகஉணர்ச்சி வசப்பட்டிருக்கலாம் ஆனால்சமாதானத்துக்கான தீர்வுபூரணமாக எங்களுடைய கைகளிலேயே தங்கியிருக்கின்றது.


## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தனி

# கேள்வி அறிவித்தல்

பிப்பிலிச் சந்தி. மானிப்பாயிலுள்ள எமது கொத்தணியின் தலைமைக் காரியாலய வளவிற்கு சுற்று மதில் கட்டுவதற்கு பொருட்கள், கூலிகள் அடங்கலாகவும், கூலி தனியாகவும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி 21. 8. 2002- 28. 8. 2002 வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் திகதி:- 29 8. 2002 முற்பகல் 10. 00மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி:- 29. 8. 2002 நண்பகல் 12. 00மணி

| வேலையின் விபரம் | மீளளிக்கப்படுகின்ற கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| காரியாலய வளவுச் சுற்றுமதில் 380' X 6' | 250. 00 | 5000. 00 |

கேள்வி விண்ணப்பப் படிவத்தையும், நிபந்தனையையும் எமது கொத்தணியின் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்.
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய்.

20. 08. 2002
(C/ 4863)


# விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

தென்மராட்சி கல்வி வலயத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க. பொ. த. சாதாரண பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச்சித்தி அடைந்தவர்களும், ஏற்கனவே பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றியவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாமெனவும். பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள் தமது சேவை விபரத்தை இணைத்தல் வேண்டுமெனவும், விண்ணப்பங்களை நேரடியாகவோ தபால் மூலமாகவோ இம்மாதம் 29ம் திகதிக்கு முன் வலயக்கல்வி அலுவலகத்துக்கு அனுப்பப்படவேண்டுமெனவும் தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (இ-5)

# பிறப்பு இறப்பு விவாகப் பதிவு

வடமராட்சி கிழக்கிற்கான பிறப்பு,இறப்புவிவாகப் பதிவு அலுவலகம் பிரதி புதன்கிழமை தோறும்மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இயங்கவுள்ளது.

ஏனைய நாட்களில் செம்பியன் பற்று பிறப்பு,இறப்பு, விவாகப் பதிவு அலுவலகத்தில் இப்பணிகள் இடம் பெறவுள்ளன. (உ-43)

# நெடுந்தீவில் குடிநீர் தட்டுபபாடு

நெடுந்தீவில் தற்பொழுது நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக ஆடு, மாடு மற்றும் குதிரைகள் என்பனஇறக்கின்றன. நீர் மற்றும் புல் என்பன இன்மையாலேயே கால்நடைகள் இறக்கக்காரணமென தெரிவிக்கப்படுகின்றது இங்கு குடிநீருக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூரான் திருவடிக்கு - 8



### காத்தருள் செய்வாய் கந்தா!

அற்புத ஆற்றல் கொண்ட தங்க வேற்குமர
வேளே!
சொற்பதம் கடந்த எங்கள் செந்தமிழ் முருக
வேளே!
நற்பதி நல்லை தன்னில் நயந்துறை கந்த
வேளே!-உன்
பொற்பதம் பிடித்தோம்! எம்மைக் காத்தருள்
செய்வாய்!ஐயா

நாயன்மார்கட்டு, ப.மகேந்திரதாசன்

### வீறுமுகம் கொண்டுவா

மீறல் மிரட்டல் மிலேச்சர் அரசாட்சி
நாறல் எனஆச்சே நம்நாட்டில்—ஆறலிலை
ஆறுமுகம் பார்த்தும் அதற்கோர் முடிவிலையே
வீறுமுகம் கொண்டு நீ வா

நயினைச்சோதி

### இறைஞ்சுகின்றோம்

வேல் கொண்ட முருகா!
வெவ்வினைகள் தீர்த்திடுவாய்
காலமது உற்சவத்தில்
இக்காலம் பொற்காலம்
நல்லூர் கந்தனே!
இன்னலின்றி வழிகாட்டிடுவாய்
இனியசமாதானம் மலர
இறைஞ்சுகின்றோம்
உன் திருப்பாதங்களையே!

கரவெட்டி, க.திருநீபன்

### காப்பது உன்கடனே

பந்தம் நீத்தோம் பசிமறந்தோம் பாலர்பசித்து
அழும்வேளை
தந்தம் கொண்டகரி வாழும் காடுசென்றோம்
கால் நடையாய்
நந்தம் தவழும் வயல் சூழும் நல்லை நகரில்
நீ இருக்கும்
பந்தத் தொடரால் வந்தணைந்தோம் காப்பது
உன்தன் கடனுமே

நயினை, திருமுருக மாமணி

### வெல்லும் வழி சொல்லு

துள்ளும் இளமுள்ளம் கவிதைகள் சொல்லும்
பலசொல்லும். . தனிமையில்
தொல்லை விழ உன்னை தொழுதிடும்
முருகையா—மனம்
சுள்ளி எனவாடும் உனதருள் பற்றும்
அனலாகும். . அதுமனத்
துக்கம் தனைப்போக்கும்...உயிர்கொடு
முருகையா—அவா
வெள்ளந் தனில் மூழ்கும் கணமதில், மேவி
விதியாடும் நொடிதனில்
வேலே துணையாகும்... விழிதிற
முருகையா—விடி
வெள்ளி முளைகொள்ளும் பொழுதிது வீரம்
முடிகொள்ளும் தினமிது
வெல்லும் வழி சொல்லு...துணையிரு முருகையா!

கள்ளங் கபடங்கள் எதுமிலா உள்ளந்திற
இன்று ! குகனருள்
காந்தம் எனமாறிக் கவர்ந்திடும் உடன்
உன்னை—பேய்க்
காட்டும் புனிதங்கள் சுபநலம் நாட்டும்
மனிதங்கள் வெளியினில்
காவிடும் வேசங்கள் தவறடா...
திருத்துன்னை—பபப்
பள்ளம் வரும்போது அவனருள் உன்னைச்
சிறைமீட்கும்; மயில் துயர்

பாம்பைப் பழிவாங்கும்; சரணிடு...
முழுதுன்னை—நற்
பாதை வருந்தேடி நம்பிடும் பஞ்சைக்
கிலை தோல்வி நல்லைபின்
பக்தி தரும் சக்தி; எட்டித்
தொடு விண்ணை!

த.ஜெயசீலன்

# மீண்டுமோர் யுத்தம் ஏற்படாதிருக்க அமைதி ஏற்படுவதை விரும்புகின்ற அனைவரும் ஒன்றுபட வேண்டும்

## ஐ. சோ. க. பொதுச் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

மீண்டும் ஒருயுத்தம் ஏற்படாமல் இருப்பதற்கு அமைதியை விரும்புகின்ற அனைத்துக் கட்சிகளும், தமிழ் பேசுகின்ற மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

ஒருபுறத்தில் சமாதானம் என்று கூறிக்கொண்டு மறுபுறத்தில் மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கப்படுகிறது அத்துடன் போர்நிறுத்தத்தினையும் தமிழர்களின தேசியப்பிரச்சினைத் தீர்வினையும் முறியடிக்கும்விதத்தில் இனவாதக் கட்சிகள் செயற்பட்டு வருகின்றன.

ஐக்கிய சோசலிசக்கட்சியின பத்திரிகையாளர் மாநாடு நேற்றுமுன்தினம் அதின் யாழ் மாவட்டச் செயலாளர் ஜ. தேவதாசன் தலைமையில் சிற்றிஹோடலில் இடம் பெற்ற போது கட்சியின் பொதுச் செயலாளர்சிறிதுங்க ஜெயசூரிய இவ்வாறு குறிப்பிட்டார்.

பத்திரிக்கையாளர்கள்மத்தியில் மேலும் அவர் கருத்துக் கூறுகையில்;

அமைதியை விரும்புகின்ற சக்திகள் ஒன்றுபட்டால், அதற்கெதிரான சக்திகளை முறியடிக்க முடியும்.

புதிய இடதுசாரிக் காட்சிகளுடனும் அங்கீகரிக்கப்பட்ட இடதுசாரிக் கட்சிகளுடனும் இணைந்து தமிழரின சமாதான இருப்பை நிலைநிறுத்த வேண்டும்.

தமிழரின் பிரச்சினை இவ்வளவு பாரதூரமாக இனவாதக் கட்சியாளஐக்கியதேசியக் கட்சியே காரணம்.

வடக்கில் தேசிய அரசியல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அதேவேளை, தெற்கில் இனவாதக் கட்சிகள் அமைதி நிலையைக் குழப்புவதில்உறுதியாக உள்ளனஎன்று குறிப்பிட்டார். (உ-6)

## சுற்றுலா

(ஈச்சமோட்டை)

பாண்டியன் தாழ்வு தவத்திரு தோமஸ் இளைஞர்மன்ற இளைஞர் குழு எதிர்வரும் புதன் கிழமை தென்பகுதிக்கு சுற்றுலா செல்லவுள்ளது.

அண்மையில் கியூடெக் நிறுவன அனுசரணையுடன் யாழ்.வந்த சிங்களசகோதரர்களின்இல்லங்களிலேயே இவ் இளைஞர் குழு சென்று தங்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-59)

## இராசி பலன்

20/ 8/ 2002
(ஆவணி 4, செவ்வாய்)
பிரயோதசி பி இ 2.45வரை
உத்தரடம் பி.இ 3.53வரை
ராகு காலம்-3.05- 4.35
நல்ல நேரம்-10.35- 12.05
பிரதோச விரதம்

**மேடம்**
செய் தொழில் விருத்தி, காரியம் கை கூடும், அதிகார நிலை, நல்ல செய்தி.

**இடபம்**
பிரயாணம், புதிய சிந்தனை, முயற்சி தாமதம், உடல் நலக் குறைவு

**மிதுனம்**
காரிய தடங்கல், குடும்பப் பிரச்சினை, வாகன பயம், போசன சுகம்.

**கடகம்**
களஸ்திர நன்மை, செற்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அநுகூலம், தனலாபம்.

**சிங்கம்**
நோய்குணமடைதல், நல்ல சம்பவம், குடும்ப மகிழ்ச்சி, முயற்சி பலிதம்.

**கன்னி**
புத்திரரால் கவலை, சிறு வியாதி, முயற்சி தாமதம், வியாபார முன்னேற்றம்.

**துலாம்**
மனச் சஞ்சலம் எதிர் பாராத நன்மை, தொழில் நன்மை, காரிய தாமதம்.

**விருச்சிகம்**
உறவினர் சந்திப்பு, மன மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, பிரயாண சுகம்.

**தனுசு**
ரோக நிலை, முயற்சி தாமதம், வாக்கு கலகம், பொருள் விரயம்.

**மகரம்**
தெய்வ சிந்தை, தொழில் கஷ்டம், பெரியோர் ஆதரவு, முயற்சி கை கூடும்.

**கும்பம்**
பிரயாணம், காரிய அலைச்சல், உடல் நலக் குறைவு, கௌரவக் குறைவு.

**மீனம்**
பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், தொழில் சிந்தை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு ஹெரோயின் கடத்தியோர் சிக்கினர்

(கொழும்பு)

இராமேஸ்வரத்திலிருந்து பேசாலைக்கு கடத்திவரப்பட்ட ஒரு தொகை ஹெரோயின் போதைப் பொருளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இப் போதைப் பொருள் கடத்தலில் இந்தியர் ஒருவர் உட்பட ஐந்து பேர் சம்பந்தப்பட்டிருந்ததாகவும் இவர்கள் அனைவரையும் கடற்படையினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவின் உயர் அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகர்ஒருவர்இப்போதைப் பொருள்களை கடத்தி வரும் பொருட்டு 50 ஆயிரம் ரூபாவினை வழங்கியமை ஆரம்ப விசாரணைகளின்மூலம்தெரிய வந்துள்ளது எனவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார். (உ-8)

(தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேர் இன்று)

## துர்க்கை துதி

துர்க்கையே துர்க்கையென வந்தருளும்
துர்க்கையே
தூய மனம் கொண்டருளும் எங்கள்
துர்க்கையே
சக்தியே சக்தியென வந்தருளும் துர்க்கையே
சர்வ உலகும் காப்பவளே எங்கள் துர்க்கையே
(துர்க்கையே)

பக்தியே பக்தியென வந்தருளும் துர்க்கையே
பக்தர் குறை தீர்த்தருளும் எங்கள் துர்க்கையே
வந்த துயர் தீர்த்தருளும வல்ல துர்க்கையே
வாழ்வில் இன்பம் தந்தருளும் எங்கள் துர்க்கையே
(துர்க்கையே)

ஆவணியில் தேர் ஏறி வந்தருளும் துர்க்கையே
ஆனந்தம் தந்தருளும் எங்கள் துர்க்கையே
சத்தியத்தை காத்தருளும் கன்னி துர்க்கையே
சாந்தி நிலை தந்தருளும் எங்கள் துர்க்கையே
சாந்தி நிலை தந்தருளும் எங்கள் துர்க்கையே
சாந்தி நிலை தந்தருளும் எங்கள் துர்க்கையே

துர்க்கா கவிஞானி

## தேரில் வலம்வந்து அருள்வாய்

சித்தமதில் நித்தமொளி நல்குதெல்லி யூரமர்ந்த
ஸ்ரீதுர்க்கா தேவியெனவே
தித்திக்கும் உந்தனருள் தேன்சுவையை நாம்பருகி
திசையெட்டும் ஒளிகாணவே
உத்தமி திரிசூலி உமையேயென் மாதாவென்
றுவகைத்தேன் சிந்திமகிழ
வித்தகி எம்தாயே வீரமதன் வடிவாகி
வினைபோக்கும் அபிராமியே
எத்திசை யும்வணங்க எமைவாட்டும் துயரகல
எழில்தெல்லிப் பதியோங்கவே
கொத்துமலர் மாலையணி கொஞ்சுமலங் காரமுடன்
கோளரியின் மீதிலிலங்கும்
சுத்தபரி பூரணியே புராதனியே எனப்போற்றும்
தூயவடி வானசுடரே
சித்திரம ணித்தேரில் ஏறிவலம் வந்தருளும்
திருக்காட்சி காட்டுமம்மா!

இளங்கவி பாரதிபாலன்
சு. குகதேவன்
தெல்லிப்பழை

# தென்மராட்சியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் இன்னல் தீர்க்க பொது அமைப்புகள் முன்வருவது அவசியம்

எம். கே. ஜீவா

(தென்மராட்சி)

யுத்தம் இடம்பெற்ற தென்மராட்சிப்பிரதேசத்தில் சுமார் 13 ஆயிரம் குடும்பங்கள்இதுவரை மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் கூட அக்குடும்பங்கள் தமது வாழ்க்கையைமுன் நகர்த்திச்செல்வதில் பல்வேறு நடைமுறைப்பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதன் காரணமாக மீள்குடியமர்வில் அக்கறையற்ற நிலையில் பல குடும்பங்கள் இன்னமும் இருந்து வருகின்றன.

யுத்தம்மிகமோசமாகஇடம்பெற்ற தென்மராட்சியின் சுமார் 15 கிராமசேவையாளர் பிரிவுகளில் 90 சதவீதமான வீடுகள் சேதமடைந்துள்ளமையினால், மீளக்குடியமர்ந்து வரும் குடும்பங்கள் பாதுகாப்பான இருப்பிடங்களை சீர்செய்வதற்கு வேண்டிய நிதியுதவி,மற்றும் பொருளுதவிகளைப் பெறுவதில் பெரும் பின்னடைவுகளைஎதிர்நோக்கியுள்ளனர்.

குடிநீர் பெற கஷ்டம்

500 இற்கும் மேற்பட்ட குடிநீர் கிணறுகள் சேதமடைந்த நிலையில் இருப்பதால் குடி நீரைப் பெறுவதில் இக்குடும்பங்கள் பெரும் கஷ்டங்களைச் சந்தித்து வருவதுடன் மலசல கூடங்கள் சேதமடைந்துள்ளதால் சுற்றுச் சூழல் சுகாதாரமும் கேள்விக்குள்ளாகியுள்ளது.

வைத்தியசாலைகள் மற்றும் பிரசவ விடுதிகள் அங்கு முழுமையாக இயங்காமையினால், நோயாளர்களும் கர்ப்பிணித் தய்மாரும் தமது சிகிச்சைக்காக இன்னமும் யாழ்ப்பாணம்,கோப்பாய் மற்றும் மந்திகை ஆதாரவைத்தியசாலைகளுக்கே செல்லவேண்டிய நிலைப்பாடு காணப்படுகின்றது ஆதாரவைத்தியசாலையாக அண்மையில் தர முயர்த்தப்பட்ட சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை இன்னமும் முழுமையாக இயங்க ஆரம்பிக்கவில்லை.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கை நிலங்கள் பெருமளவில் இருக்கின்ற போதிலும் கூட இப்பிரதேச விவசாயிகள் தமது முழுமையானவிவசாயச் செய்கை ஆரம்பிப்பதில் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் என்பவற்றின் அபாயம் எதிர்நோக்கப்பட்டுள்ளதுடன் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் விவசாய நிலங்களில் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படாமையால் விவசாய நடவடிக்கையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

தொழில் பாதிப்பு

இதேவேளை, யுத்தத்தின் காரணமாக தொழில் பாதிப்பை எதிர்கொண்டுள்ள விவசாயிகள்,மீனவர்கள்சீவல் தொழிலாளர்கள் போன்ற தரத்திலான தொழில் முனைவோருக்கு தமது தொழில்களை மீளவும் ஆரம்பிப்பதற்கான ஊக்குவிப்புகள் ஒத்துழைப்புகள்கிடைக்காமையினால் தாம் முன்பு மேற்கொண்ட தொழில் முயற்சிகளை மீளவும் ஆரம்பிப்பதில் சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைப்பாடு காணப்படுகிறது

யுத்தத்தினால் சேதமாக்கப்பட்ட,அழிக்கப்பட்ட கட்டடங்கள் மீளவும்,புனரமைக்காமை, தளபாடப்பற்றாக்குறை,பௌதீக வளங்கள் பாதிப்பு,மாணவர்களுக்கான குடிநீர் மலசலகூடப் பிரச்சினை போக்குவரத்துப் பிரச்சனை ஆசிரியர் பற்றாக் குறை மற்றும் பொது வசதிகள் ஏற்படுத்தப்படாமை போன்றவை பிரதேசத்தில் கல்வி பயில்கின்ற சுமார் 14ஆயிரம் மாணவர்களைப் பாதித்து வருகின்றன.

இந்நிலையில் குடாநாட்டிலுள்ள ஏனைய வலயங்களில் கல்விபயில்கின்ற மாணவர்களுடன் ஒப்பிடுகின்ற போது தென்மராட்சி கல்விவலய மாணவர்களின் கல்வி தொடர்ச்சியானபின்னடைவுகளைப் சந்தித்துவருகின்றது.

போக்குவரத்து வசதிகள் இங்கு இன்னமும் மேம்பாடு அடையாத நிலையில் மக்கள் மீளச்குடியமர்ந்துள்ள பகுதிகளுக்கு போக்குவரத்து வசதிகள்இல்லாமையினால்,பொது மக்கள் தமது தேவைகளுக்கு நடந்தே செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது. தென் மராட்சி பிரதேசத்துக்கான வட பிராந்திய போக்குவரத்துச் சபை மற்றும் சிற்றூர்திச் சங்கத்தின் போக்குவரத்துச் சேவை இன்னமும் முழுமையடையவில்லை என்றே பொது மக்கள் தரப்பில் குற்றம் சாட்டப்படுகிறது.

வழிபாட்டுத் தடை

இவற்றினை விடகுடாநாட்டிலேயே பெரும் எண்ணிக்கையான வழிபாட்டுத் தலங்களைக் கொண்டுள்ள பிரதேசம் தென்மராட்சியாகும். இங்கு இன்னமும் சுமார் 40 இந்து வணக்கத்தலங்கள் பக்தர்களின் வழிபாட்டுக்கு அனுமதிக்கப்படாமல் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் தென்மராட்சியில் இயங்கிய பொது நூலகங்கள், கிராமிய நூலகங்களின் செயற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்படாமையினால் மக்கள் மத்தியில் வாசிப்புப்பழக்கம் பெருமளவில் அருகிவருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

வளர்ந்து வரும் சமுதாயத்தின் மத்தியில் வாசிப்புப்பழக்கத்தினை ஊக்குவிக்க அவசரமான நடவடிக்கைகளை உள்ளூராட்சி மற்றும் பொது அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை பல தரப்பில் இருந்தும் முன்வைக்கப்பட்டுள்ளது

அத்துடன், இங்கு கைத்தொழில் முயற்சி மற்றும் வியாபார முனைப்புகளுக்கான ஊக்குவிப்புகள் வழங்கப்படாமையினால் இவ்விரு துறைகளிலும் ஈடுபட்டிருந்தவர்களில் பெரும்பான்மையினர் இன்னமும் தமது முயற்சிகளை மீளவும் ஆரம்பிப்பதில், நிதியின்மையினாலும், பௌதிக வளங்கள் இல்லாமையினாலும் தமது அறிவு, அனுபவம்,ஆர்வம் போன்றவற்றுக்கு ஊக்கமளிக்காமல் இருக்கின்றனர்.

இயல்பு நிலை திரும்புமா?

இந்நிலையில், தென்மராட்சிப் பிரதேசத்தினை மீளவும் கட்டியெழுப்பி, இயல்புவாழ்க்கையை நிலவச் செய்வதிலும், மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களின்வாழ்க்கையைஅர்த்தமுள்ளதாக்கவும் இதில்சுட்டிக்காட்டப்பட்டுள்ள தடைகள், பின்னடைவுகள் இல்லாமல் செய்யப்படல் வேண்டும்.

தென்மராட்சியின் புனரமைப்பு, மற்றும் மீள்குடியமர்வுக்கான ஆக்கபூர்வமான திட்டம் முழுமையாகத்தயாரிக்கப்படல் வேண்டியது மிகமிகஅவசியமாகும்.

இந்நிலையில்பொதுமக்களின் பங்களிப்புடன் கூடிய திட்டமிடல் இல்லாதவரை எந்தவொரு புனரமைப்பு, அபிவிருத்தி, மற்றும் மீள்குடியமர்வுத் திட்டங்களும் முழுமையடையவோ அல்லது பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உயர்வுக்கோ வழி சமைக்கப் போவதில்லை என்பது கண்கூடாகும்.

இந்நிலையில் பொது அமைப்புகள் பலவும் தமதுபிரச்சினைகளுக்கு முக்கியத்துவம்கொடுக்காது பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமையளித்து நடப்பதுஅவசியம்என பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## புலமைப்பரிசில் பரீட்சை தமிழ் வினாத்தாளில் சிங்கள மொழிச் சொற்கள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில்நடந்துமுடிந்த ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தமிழ் மொழிமூல வினாத்தாளில் பல சிங்களச் சொற் பிரயோகங்கள் இடம் பெற்றிருந்ததாக பெற்றோர் தரப்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பத்திரிப்பு,நாம்புவ, பாதட்டிய மடி போன்ற சிங்களச் சொற்கள் மேற்படி வினாத்தாளில் காணப்பட்டதால் அவற்றிற்கான கருத்துக்கள் தெரியாது தமிழ்மாணவர்கள் திக்குமுக்காடியதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க தமிழ் மொழிப் பிரயோகமும் குழப்பம் ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. (உ)

## உள்ளூராட்சி அபிவிருத்தி நிதியக் கடன் பெறலாம்

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச சபைகள்,நகரசபைகள்போன்றவை உள்ளூராட்சி அபிவிருத்தி நிதியக் கடன் பெற விரும்பினால் அதற்குரியவிண்ணப்பப்படிவங்கள் மூலமாக விண்ணப்பிக்குமாறு வடக்கு-கிழக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சகல உள்ளூராட்சி மன்றங்களிற்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி அபிவிருத்திக் கடனுக்கு விண்ணப்பிக்கும் உள்ளூராட்சி மன்றமானது வருமானம் தரக்கூடிய சந்தைகள், கடைகள் அமைப்பதற்கும்,

அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களின்எல்லைக்கு உள்ளிட்டபகுதிகளில் கழிவுகளை அகற்றுவதற்கும் வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கும் வீதிகள்,பாலங்கள், நூலக தேவைகள் போன்ற சமூகத் தேவைப்பாடுகள் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தமது தேவைகளை பட்டியல் இட்டு அவை எவ்வெப்பகுதிகளில் அமைய உள்ளது என்ற விபரங்களையும் தமக்கு விரைவாக அனுப்பி வைக்கும் படி அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-252)

## அகத்தியர் தேவாரத் திரட்டு

(யாழ்ப்பாணம்)

ஆத்மஜோதி நா.முத்தையா அவர்களின் ஞாபகார்த்தமாக வருடந்தோறும் ஓகஸ்ற் மாதம் பூரணைத் தினத்தில் அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் ஆகியன மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் ஏழாலை இரந்தை கட்டி ஸ்ரீ பாதாள வைரவர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (உ)

## இளைஞர் மன்றம் இயங்கும்

(ஈச்சமோட்டை)

செயற்படாதிருந்த புனித அன்னாள் இளைஞர் மன்றம் மீண்டும் இயங்கவுள்ளது.

பல்வேறு தவிர்க்க முடியாத காரணங்களால் தனது செயற்பாடுகளை இடை நிறுத்தியிருந்தஇந்தஇளைஞர்மன்றம் முன்னைய காலங்களில் சஞ்சிகை வெளியீடு, சமூகப்பணி என பல பணிகளில் ஈடுபட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

(உ-59)

## கால்நடைகளுக்கு நோய்த் தடுப்பூசி

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதியில்உள்ள கால்நடைகளுக்குதொண்டை அடைப்பு, முன்னடைப்பு ஆகிய நோய்களுக்கான தடுப்பூசி மருந்தேற்றல் நடவடிக்கை நேற்று ஆரம்பமானது.

நாளைவரை மேற்படி பணி இடம்பெறவுள்ளது.

(உ-250)

## தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய சோஷலிசக் கட்சியின பொதுச் செயலாளர்உள்ளிட்ட குழுவினர் நேற்றுமுன்தினம், தமிழர் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களை கூட்டமைப்பின் யாழ் மாவட்டப் பணிமனையில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இன்றைய அரசியல் நிலை தொடர்பாக இதில் ஆராயப்பட்டது.

இதேவேளை, இக் குழுவினர் அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரையும் சந்தித்துப் பேசியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

## அம்பாறை மாவட்டத்தில் வரட்சியால் பாதிப்புற்ற கிராமங்களுக்கு குடிநீர்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்க் கிராமங்களுக்கு குடிநீர் வழங்க துரித நடவடிக்கைகளை அம்பாறை மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.சந்திரநேரு மேற்கொண்டு வருகிறார்.

இது தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் இவர் பிரஸ்தாபித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## நாரந்தனை தாக்குதலுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ்.கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை தெங்கு பனம்பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நாரந்தனைக்கிளை முகாமையாளரையும் பொது மக்களையும் கடந்த வெள்ளிக்கிழமையன்று கடற்படையினர் துன்புறுத்தியது மிகவும் கண்டிக்கத்தக்கது.

மேற்படி சம்பவம் குறித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் அ உதயகுமார் வெளியிட்டுள்ள கண்டனக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக் குறிப்பில் மேலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை போன்ற இடங்களில் பல மீனவர்கள் தாக்கப்பட்டதுடன், தொடர்ந்தும் கடற்படையினர் பொது மக்கள் மீதான அடாவடித்தனங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

எதிர் வரும் மாதம் இடம் பெறவுள்ள பேச்சு வார்த்தைகளை குழப்புவதாகவே கடற்படையினரின் இவ்வாறான தொடர் நடவடிக்கைகள் அமைந்து வருவதாக நாம் சந்தேகிக்கின்றோம்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற நாரந்தனை சம்பவத்துக்கு கடற்படை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய அடாவடித்தனங்களுக்கு ஓர் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என நாம் கோருகிறோம்.

புரிந்துணர்வு என்பது அரசபடைகளுக்கும் மக்களுக்குமிடையில் ஏற்பட வேண்டும் என்பதை கடற்படை அதிகாரிகள் புரிந்து கொண்டு, கடற்படையினர் எவ்வாறு மக்களுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் அவர்களுக்குகற்றுக் கொடுக்க வேண்டும் என்றுள்ளது.

(உ)

# இன்று ஒரு தகவல்

## வினோத உயில்கள்!

மனிதன் எந்த நேரத்தில் எப்படி நடந்து கொள்வான் என்று யூகிப்பது மிகவும் கஷ்டம். அவனிடம் இருக்கிற விசேஷமே அதுதான். உயிரோடு இருக்கும வரையும்ஒடுகிறான். ஆடுகிறான், பணம் சேர்க்கிறான், சொத்துச்சேர்க்கிறான். உயிரோடு இருக்கும் போதே தனக்குப் பின்னர் அந்தப் பணமும் சொத்தும் யாருக்குச் சேர வேண்டும்என்றும் எழுதி வைக்கிறான். அதுதான் உயில். இன்றைக்குத்தகவல் என்ன வென்றால், வேடிக்கையான மனிதர்கள் எப்படி எப்படி யெல்லாம் விசித்திரமாகஉயில் எழுதி வைக்கிறார்கள் என்பதுதான்!

உயிலைப் பொதுவாக பேப்பரில் தானே எழுதி வைப்பார்கள். மெச்சிக்கோவில் ஒருவர் மோனேகி என்ன செய்தார் தெரியுமா? தன்னுடைய மார்பிலேயே உயிலைப் பச்சைகுத்திக் கொண்டாராம், இது மிகவும் உறுதியானதும்யாராலும் அழிக்க முடியாததும் என்பது அவரின் நினைப்பு, நினைப்பு எல்லாம் சரிதான். இருந்தாலும், அவர் அப்படிச் செய்ததனால் பலர் தலையைப்பிய்த்துக் கொள்கிறது போல் ஆகிவிட்டது. என்ன ஆனது தெரியுமா? திடீரென்று ஒரு நாள் அவர் செத்துப் போய் விட்டார். அதன் பின்னர் அவரை என்ன செய்வது? பிணத்தைப் புதைத்துத்தானே ஆகவேண்டும். சொந்தக் காரரர்கள் ஆட்சபனை பண்ணினார்கள். பிணத்தைப் புதைக்கக் கூடாதென்றார்கள். அதைப்புதைத்தால் மார்பில் எழுதியிருக்கிற உயிலும் அழிந்து விடும் அல்லவா? அதனால் அப்படிவம்பு பண்ணினார்கள்.

வெகுநாட்களாக அதைப் புதைக்காமல் பக்குவம்பண்ணி வைத்திருந்தார்கள். கேஸ் கோட்டுக்கு போனது. நீதிபதி குத்தியிருந்த உயிலின் நகலை எடுத்துக் கொண்டார். அதன் பின்னர் அந்த உடம்பைப் புதைத்து விட்டார்கள். எப்படிஇருக்கிறதுபாருங்கள்இந்த விவகாரம்.

இன்னொரு வேடிக்கையான ஆசாமி (ஜோசையாட்விஸ்) அவர் ஒரு உயில் எழுதி வைத்தார். அவர் எப்படி எழுதி வைத்தார் தெரியுமா? தான் இறந்தபிறகு சவஊர்வலத்தில் பாண்ட் வாசிக்கிறவர்களுக்கு தலைக்கு 40 டொலர்கொடுக்க வேண்டும் என்று எழுதினார் ஊர்வலத்தில் வருகிறவர்களுக்கு 20 டொலர் செலவில் நிலக்கடலையும் வெல்லமும் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று எழுதிவைத்தார். தன்னுடைய ஆறுபிள்ளைகளுக்கும் தலைக்கு 2 டொலர் மட்டும் கொடுக்கவேண்டும் என்று எழுதிவைத்தார். பாருங்கள்! அவருக்குப் பிள்ளையாகப் பிறப்பதைவிட அவருடைய சவ ஊர்வலத்தில் கலந்து கொள்கிறவர்கள் அதிர்ஷ்ட சாலிகள்: நிலக்கடலையும் வெல்லமும் சாப்பிட்டுக் கொண்டுபோய்விட்டு வந்திருக்கலாம்.

இதைவிட வேடிக்கையான இன்னொரு சம்பவம், பிரான்ஸில் ஒருவயதான அம்மா 90 வது வயதில் செத்துப் போனார். உயில் எழுதிவைத்துவிட்டுத்தான் செத்துப் போய்விட்டார். சொந்தக் காரர்கள் எல்லோரும் வந்து கூடிவிட்டார்கள். உயிலை எடுத்து வாசியுங்கள் கேட்போம் என்றார்கள். சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள். வக்கீல் உயிலை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார். அந்த உயிலில் அந்த வயதுபோன அம்மா என்ன எழுதியிருந்தார் தெரியுமா?

'என்னுடைய நீண்ட ஆயுளுக்கு நான் என்னுடைய குடும்படாக்டருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். என் அறையில் ஒரு மரப்பெட்டி வைத்திருக்கிறேன். அந்தப் பெட்டியில் இருப்பவை முழுவதும் அவருக்குத்தான் சொந்தம். அந்த மரப்பெட்டியின் சாவி என்படுக்கைக்கு அடியில் இருக்கிறது' என்று அந்த உயிலில் எழுதியிருந்தது. வக்கீல் உயிலை வாசித்து முடிந்தார். சொந்தக்காரர்களின் முகத்தில் ஈ ஆடவில்லை! என்ன இது. இந்தக்கிழவி பெட்டியில் இருப்பது முழுவதும் டாக்டருக்கு என்று எழுதிவைத்துவிட்டது என்கிற எரிச்சல், உடனே அந்தடாக்டருக்குத் தகவல் சொல்லி அனுப்பினார்கள். அவரும் மிகவும் பெருமையோடு வந்து சேர்ந்தார். அந்த மரப்பெட்டியை தூக்கிக் கொண்டு வந்து அவர் முன்னால் வைத்தார்கள். எல்லோருக்கு முன்னிலையில் அந்தப் பெட்டியைத் திறந்தார்கள். உள்ளே அந்த டாக்டர் 20 வருஷமாக அந்த அம்மாவுக்குக் கொடுத்த மருந்து மாத்திரை- டாக்டர் சீட்டு எல்லாம் பத்திரமாக அதில் இருந்ததாம், இதன் அர்த்தம், குடும்ப டாக்டர் கொடுத்த மாத்திரைகளைச் சாப்பிடாமலிருந்த தனால் தான் அந்த அம்மா 90 வயது வரை இருந்ததாகவும், அதனால் தனது நீண்ட ஆயுளுக்குக் காரணம் அவர்தான் என்பது. இதைத்தான்அந்தஅம்மா அந்த உயிலில் சொல்லாமல் சொல்லியிருக்கிறது; கில்லாடி கிழவி.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# ஜனாதிபதியின் அதிகாரப் பரவலாக்கல் சட்டங்களின் திருத்தம் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு

(கொழும்பு)

ஜனாதிபதியின் அதிகாரப் பரவலாக்கல் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளமை தொடர்பாக மக்கள்மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்டுத்துவதென ஐக்கிய தேசிய முன்னணி தீர்மானித்துள்ளது

ஐக்கிய தேசிய முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நடவடிக்கைக்கு 'சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்குமான மக்கள் நடவடிக்கை' என்று பெயரிடப் பட்டுள்ளது.

கொழும்பில் இந்நடவடிக்கைகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்பட விருப்பதாகவும், இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் விரிவாக கூறியிருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளதுடன்,

இவ்வுத்தேச திருத்தங்களுக்குபொதுஜன ஐக்கிய முன்னணியை சேர்ந்தபலபாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

## தெல்லிப்பழையில் இன்று தேர்

(புலோலி)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான இரதோற்சவம் இன்றும் தீர்த்தோற்சவம் நாளையும் இடம்பெறவுள்ளது.

மேற்படி உற்சவத்திற்குச் செல்லும் பக்தர்கள் நலன் கருதி விசேட பஸ் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(உ-206)

★

(மானிப்பாய்)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில் ரதோற்சவம் நாளை புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

(உ-120)

## தெய்வீக இசையரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நடத்தும் நல்லூர் உற்சவ காலத்தை ஒட்டிய தெய்வீக இசையரங்கில் எட்டாம் நாளான இன்று ஸ்ரீ. தர்ஷனவின் பாட்டுக்கச்சேரி பக்க வாத்தியங்கள் சகிதம் இடம் பெறவுள்ளது.

(உ-3)

## தெய்வீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தில் வடபிரதேச இந்துப்பேரவை, 63 நாயன்மார்குருபூசைமடத்தில் நடத்தி வரும்தெய்வீக நிகழ்ச்சிகளில் இன்று 'நடைமுறை வாழ்வில்சைவம்' என்ற பொருளில் மு. கனவேலழகன் சொற் பொழிவாற்றவுள்ளார்.

(உ-3)

## ஆறு பேருக்கு பிணை அனுமதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரி. தங்க வடிவேல் மீதான தாக்குதல் முயற்சி சம்பந்தமாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்ப்பட்டிருந்த இளைஞர்கள்6 பேருக்கு மட்டக்களப்பு நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது.

(த)

## குடிநீர் இன்றி பயணிகள் சிரமம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் துறைமுகப் பகுதியில் குடிநீர் இன்றி பயணிகள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகியவற்றுக்குச் செல்லும் பயணிகள் மேற்படி துறைமுகம் ஊடாகச் செல்ல வேண்டி இருப்பதாகவும், அங்கு குடிநீர் இன்றிப் பயணிகள்பெரும்அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும்சுட்டிக் காட்டப்படுகின்றது.

(உ-75)

## அனலைதீவு ஆஸ்பத்திரிக்கு வைத்தியர் நியமனம்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு வைத்திய சாலையில் பதில் கடமையாற்றுவதற்கென ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய அதிகாரிரி. சீவரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்தமூன்றுமாதங்களுக்கு மேலாக அனலைதீவுவைத்திய சாலைக்கு வைத்திய அதிகாரி நியமிக்கப்படாமையால், இப் பகுதி மக்கள் வைத்திய வசதிகளைப் பெற மிகுந்த சிரமப் பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிழமையில் ஒரு நாள் மாத்திரமே இவ் வைத்திய அதிகாரி கடமை யாற்றவுள்ளார். (உ-65)

## நூற்றுக்கணக்கான பனை மரங்கள் தீயில் எரிந்து நாசம்

(காரைநகர்)

நூற்றுக்கு மேற்பட்ட பனைமரங்களை காரைநகரில் விஷமிகள்சிலர் தீமூட்டி எரித்துள்ளனர்.

கடந்த சனியன்று இரவு காரைநகர்ப் பகுதிப் பனந்தோப்பு ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நீண்ட காலமாகப் பராமரிக்கப்படாதிருந்த பனந்தோட்டத்தில், ஒரு புறத்தில் வைத்து ஓலைகளைக்கொளுத்திய சமயம் அத் தீ பரவியதில் மேற்படி பனைமரங்கள் எரிந்துசருகியுள்ளன.

(உ-246)

## கட்புலனற்றோர் மத்தியில் கவிதை கட்டுரைப் போட்டி

(மானிப்பாய்)

சமூக நலன்புரி அமைச்சின் கீழ்இயங்கும்கட்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் மூலம் 2002 ஆம் ஆண்டிற்கான கவிதை, சிறுகதைகோவை யொன்றைதயாரிப்பதற்காக முழுமையானகட்புலனற்றவர்களிடமிருந்து நிதியத்தின் முகாமைச் சபை ஆக்கங்களைக் கோரியுள்ளது.

சுதந்திரமான நடுவர் குழாம் ஒன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்களுக்கு முதல் பரிசாக 5 ஆயிரம் ரூபாவும் இரண்டாவது பரிசாக 3 ஆயிரம் ரூபாவும்மூன்றாவது பரிசாக 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது அத்துடன் ஆயிரம் ரூபாப்படி 20 பரிசுகளும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமது ஆக்கங்களை தமிழ் மொழியிலோ அல்லது சிங்கள மொழியிலோஎதிர்வரும் செப்ரெம்பர்மாதம் 30ஆம்திகதிக்கு முன்னர் செயலாளர் கட்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் சமூக சேவைகள் திணைக்களம் துமிந்த கட்டடம் காலிவீதி, கொழும்பு 4 என்னும் முகவரிக்கு அனுப்புமாறுகேட்கப் பட்டுள்ளது.

(உ-120)

## காரைநகர் செல்லும் மக்களிடம் கடும் சோதனை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைகாரைநகர் துறைமுகங்களூடாக காரைநகருக்குச் செல்லும்பொதுமக்களிடம் கடும் சோதனை நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபடுவதாகத் தெரியவருகின்றது;

காரைநகர் துறைமுகத்தில் இருந்து 300 மீற்றருக்கு அப்பால் உள்ள கடற்படையின் சோதனைச் சாவடியிலேயே பொதுமக்கள் அடையாள அட்டை பரிசோதிக்கப்பட்டுப் பின்பு அடையாள அட்டை இலக்கம், பெயர் என்பன பதிந்த பின்பே தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

இதனால் மேற்படிச் சோதனைச் சாவடியில்பொதுமக்கள் அதிகநேரத்தைச் செலவிடுவதுடன் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவது குறிப்பிடத்தக்கது.

(உ-75)

## நிலஅளவைப் பட்டப்படிப்பு விரைவில் ஆரம்பமாகும்

(கொழும்பு)

அளவையாளர்களுக்குப் பட்டப்படிப்பு பாடத்திட்டத்தினை ஆரம்பிக்கவுள்ளதாக காணி அமைச்சர்ராஜிதசேனரட்ண தெரிவித்துள்ளார்.

நில அளவைத் திணைக்களத்துக்கு ஆயிரம் உத்தியோகத்தர்கள் தேவையாக உள்ள போதும் 709 உத்தியோகத்தர்கள் மாத்திரமே தற்போது கடமையாற்றுகின்றனர்.

இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நில அளவைத் திணைக்களத்தில் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ள விருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இவ்வாறான பட்டப்படிப்புகள் இதுவரை இடம்பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ)

இளைஞர்கள் மனம் வைத்தால்

## சீரழிந்த சமுதாயத்தை சிறந்ததாக்க முடியும்

### மேலதிக அரசாங்க அதிபர்

சனசமூக நிலையங்கள் இன்றைய கால கட்டத்தில் சமுதாயத்திற்கு செய்யவேண்டிய எத்தனையோ சேவைகள் பொறுப்புக்கள்காத்துக் கிடக்கின்றன சனசமூக நிலையங்கள் சமுதாயத்திற்கு சீரான பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுத்து அவர்களது வாழ்க்கையை வளம்படுத்த முன்வரவேண்டும்

இவ்வாறு நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின்பொன்விழாவையொட்டி புதிதாக அமைக்கப்பட்ட நிலையத்தின் இருமாடிக்கட்டிடத்தை திறந்து வைத்து உரையாற்றிய யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் குறிப்பிட்டார்;

நிலையத் தலைவர் இ. சசிகுமார் தலைமையில் நிலைய மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் தொடர்ந்து உரையாற்றும் போது,

சனசமூக நிலையங்கள் மூலம் இளைஞர்கள் முதியோர்க்கு உதவ முன்வரவேண்டும்;

அத்துடன் ஏழைகளின் கஷ்டத்தை அறிந்துஉதவிசெய்ய வேண்டும். ஒவ்வொரு இளைஞனும் விழிப்புடன் செயற்பட்டால் சீரழிந்து போகும் சமுதாயத்தைசிறந்தசமுதாயமாக்க முடியும் என்றார்

(உ-120)

# அமெரிக்க முக்கிய தலைவர்கள்

# புதனன்று புஷ்ஷை சந்திப்பர்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்டபிள்யு புஷ்சை அவரது ஒய்வுகால வதிவிடமான ஹௌஸ்தாஸ் பண்ணையில் அமெரிக்காவின் முக்கிய தலைவர்கள் நாளை புதன்கிழமை சந்திக்கவுள்ளனர்

அமெரிக்காவின் உபஜனாதிபதி பிஸ்கில், பாதுகாப்பு அமைச்சர் டொறால் றம்ஸ்பெல்ட், அமெரிக்க கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் றிச்சட் மயோஸ் ஆகியோரே ஜனாதிபதி புஷ்ஷைச்சந்திக்கவுள்ளனர்.

அமெரிக்காவின் இராணுவச்சீர்திருத்த நடவடிக்கைகள், ஏவுகணைப் பாதுகாப்பு உட்படபலவிடயங்கள குறித்து இச்சந்திப்பில் ஆராயப்பட விருப்பதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் ஈராக்கிய ஜனாதிபதி சதாம்ஹுசைனை பதவியிலிருந்து நீக்குவதற்கு அமெரிக்கா சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவரும் எனவும்.

ஈராக் மீது தாக்குதல் நடத்தப்படுமானால் பிரிட்டனைத் தவிர மற்றைய ஐரோப்பிய நேச நாடுகளின் உதவி அமெரிக்காவுக்கு ஒரு போதும் தேவைபட மாட்டாது என வும் அதிபர்புஷ் தெரிவித்துள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(உ-8)

## ஆப். உப ஜனாதிபதியின்

## கொலை விசாரணைகள் முடிவடைந்ததாக அறிவிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் துணை ஜனாதிபதிகாஜீ காதிர்கொலை தொடர்பான விசாரணைகள் யாவும் முடிவடைந்து விட்டதாக சர்வதேச அமைதிப்படை அறிவித்துள்ளது.

துணை ஜனாதிபதியின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 26 சந்தேக நபர்களையும் விடுவிக்குமாறும் சர்வதேச பாதுகாப்பு பிரிவினர் உள்ளூர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

உப ஜனாதிபதியின் கொலை தொடர்பாக போதிய ஆதாரங்கள் இன்மையாலேயே விசாரணைகள் முடிவடைந்துள்ளதாகவும் சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மத்திய அமைச்சரவை ஆராய்வு

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தில் நடை பெறவிருந்த தேர்தலை ஒத்திவைப்பதென தேர்தல் ஆணையாளர் எடுத்துள்ள தீர்மானம் தொடர்பாக மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவை நேற்று கூடி ஆராய்ந்தது.

குஜராத்தில் குறிப்பிட்ட தினத்திற்குள் தேர்தல் நடத்தப்படவேண்டுமென ஆளும் பாரதியஜனதாக்கட்சிவிடுத்த வேண்டுகோளை தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(உ)

## தென்னாபிரிக்காவில் அபிவிருத்தி மாநாடு

(கேப்டவுண்)

சர்வதேச அபிவிருத்தி மாநாடு இம்மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளது

தென்னாபிரிக்காவின் அலகாஷ் அலெக்சாந்திரியா நகரிலுள்ள சந்தோஸ் புறநகர் பகுதியிலேயே இம்மாநாடு நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டின் போது சர்வதேச நாடுகளில் ஏழைமக்கள் தொகை அதிகரித்து வருவது குறித்தும், எயிட்ஸ் நோய், மற்றும் குடிதண்ணீர் தட்டுப்பாடுகள் குறித்தும் ஆராயப்படவுள்ளது

தென்னாபிரிக்காவிலேயே இம்மாநாடு நடத்துவதற்குப் பொருத்தமான சூழ்நிலை அமைந்துள்ளது என ஐக்கிய நாடுகள் சபை முன்மொழிந்தமை குறிப்பிடத்தக்கது

(உ-8)

## மலேசியப் பிரதமர்

## பர்மாவுக்கு இருநாள் அரசு முறைப்பயணம்

(கோலாலம்பூர்)

மலேசியப் பிரதமர் முஹாதேமுகமட் இருநாள் அரசு முறைப்பயணம் மேற்கொண்டு நேற்று முன் தினம் பர்மாவுக்கு சென்றுள்ளார்.

பர்மாவினைத் தனிமைப்படுத்தும் நோக்கில் மேற்கத்தைய நாடுகள் முயற்சிகள் மேற்கொண்டு வரும் இவ்வேளையில் மலேசியப் பிரதமரின் இப்பயணம் முக்கியத்துவம்வாய்ந்த ஒன்றாக கருதப்படுவதாக பர்மாவின் அரசியல்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

## இஸ்ரேலின் தாக்குதல்கள் படிப்படியாக குறையும்

(ஜெருசலேம்)

காஸா மற்றும் மேற்குக் கரையோரங்களில்இஸ்ரேலிய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை படிப்படியாகக் குறைப்பதற்கான திட்டமொன்றுஅமுல் செய்யப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீன அதிகாரிகளிடையே நேற்று முன்தினம் ரெல் அவிவில் நடைபெற்ற 4 மணிநேர பேச்சுவார்த்தைகளை அடுத்தே இந் நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது.

இதற்கமைய காஸா மற்றும் மேற்குக் கரையோரங்களில் இத்திட்டம் நேற்றுத்தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (உ-8)

## மெக்ஸி . பாடசாலையில் 2300 ஏவுகணைகள் மீட்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் முக்கிய நகரமான மெச்சிக்கோ பாடசாலை ஒன்றிலிருந்து பதிவு செய்யப்படாத 2 ஆயிரத்து 300 ஏவுகணைகளை அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

ஆயுதங்களை கையாளும் முறை மற்றும் பொலிஸ் பயிற்சி உட்பட பலவிதமான இராணுவப் பயிற்சிகளும் இப்பாடசாலையில் பயிற்றுவிக்கப்பட்டு வந்துள்ளது

இந்தப் பாடசாலையில் சுமார் ஆயிரத்து 800 கிலோ கிராம் எடையுள்ள வெடி மருந்துகளும் இருப்பதாக புலனாய்வு பிரிவினர் சந்தேசம் தெரிவித்துள்ளனர்.

இப்பாடசாலையில் அரபு நாடுகளை சேர்ந்த மாணவர்களே கூடுதலாக கல்விகற்று வருகின்றனர்என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## திரைப்பட வழங்குநர் கூ.ச.

## தலைமை அலுவலகம் நேற்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலம் 249 பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நேற்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பொதுச் சுடரை கியூடெக் பணிப்பாளர் அருட்தந்தை சி.ஜீ. ஜெயக்குமார் அடிகளாரும் தேசியக் கொடியை திரைப்பட வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் த செழியனும் ஏற்றி வைத்தனர்.

அலுவலக பெயர்ப்பலகையை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கணேசலிங்கம் திரை நீக்கம் செய்துவைத்தார்.

திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தி. ஜீவராசா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ். பல்கலைக் கழகப்பேராசிரியர் எஸ். சிவநாதன், யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் கு. சிறில், தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள திரைப்படவிநியோகத்தர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (உ-6)

## வட- கிழக்கு பாடசாலைகளில்

## பயிலும்மாணவர்களில்பலர் எடைகுறைந்த நிலையில்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் பெரும்பாலானவற்றில்போதியளவு வசதிகள் எதுவும் இல்லை என கல்வி அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை மற்றும் கந்தளாய் கல்விவலய பகுதிகளுக்கு விஜயம் செய்தபோது அங்குள்ள அதிகாரிகளினால் இவ்விடயம் பற்றி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

வடக்கு- கிழக்கில் கடமையாற்றுவதற்குவெளி மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் எவரும்முன்வருவதில்லை இதற்கு நடைபெற்றுவந்தயுத்தமே காரணம்.

இப்பகுதி பாடசாலைகளில் கல்வி பயின்றுவரும் மாணவர்களில் 69 சதவீதத்தினர் எடைகுறைந்த நிலையில் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

கல்வியமைச்சர் அங்குகருத்து தெரிவிக்கையில்; இவ்வாறான பிரச்சினைகளுக்கு வெகுவிரைவில் தீர்வு காணப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்.

(உ-8)

## ஜோன் அமரதுங்கவுக்கு எதிரான

## நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு எதிராக நேற்று பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர இந்தப் பிரேரணையை சமர்ப்பித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சி ஏற்ற நாள்முதல் நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்தல், வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்தமை, அரசியல் வாதிகளை அடக்கிஒடுக்குதல், மற்றும் நாட்டின்பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமை உட்பட 7 குற்றச்சாட்டுகள் அமைச்சர் மீதான நம்பிக்கையில்லா பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இது போன்ற செயல்களினால் ஜோன் அமரதுங்க மீதானநம்பிக்கையைபாராளுமன்றம் இழந்து விட்டது என மங்கள சமர வீர அப்பிரேரணையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி மக்கள்விடுதலை முன்னணி ஆகிய இரு கட்சிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்கள் 23 பேர் இணைந்து இந் நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## பளை பிரதம தபாலகம் விரைவில் இயங்கும்

(திருநெல்வேலி)

பளை பிரதம தபாலகம் அடுத்த வாரம் முதல் பளை நகரப்பகுதியில் தனியாக வீடொன்றில்இயங்கவுள்ளது.

இதனைத் தொடர்ந்து பளைப்பகுதி மற்றும் வடமராட்சி கிழக்கு உபதபாலகங்களும் இயங்க ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பிரதம தபாலகம் இயங்குவதற்கான கட்டட ஒழுங்கை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து அலுவலகங்கள் இயங்க ஆரம்பித்த நிலையிலும் தபாலகப் பணிகள்இடம்பெறாமையால் மக்கள்பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-43

## ஆத்மஜோதி ஞாபகார்த்த விழா

(யாழ்ப்பாணம்)

ஆத்மஜோதி நா.முத்தையாவின் 7 வது ஆண்டு ஞாபகார்த்த விழா எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஏழாலை ஆத்மஜோதியான மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

(உ)

## பிலிப்பைன்ஸில் நிலைகொண்டுள்ள அமெரிக்க துருப்புகளுக்கு ஆபத்து

(மணிலா)

தமக்கு எதிரானயுத்தத்தில் உள்ளூர்இராணுவத்தினருக்கு அமெரிக்கா உதவுமானால் பிலிப்பைன்ஸில் நிலை கொண்டுள்ள அமெரிக்கத் துருப்புக்களையும், அமெரிக்க வர்த்தக மையங்களையும் தாக்கப் போவதாக பிலிப்பைன்ஸில்இயங்கி வரும் இரு கம்யூனிஸ்ட் குழுக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

பிலிப்பைன்ஸ்கம்யூனிஸ்ட் மற்றும் அதனைச் சார்ந்த இராணுவப் பிரிவான மக்கள் இராணுவம்ஆகியனவே இக் கோரிக்கையை விடுத்துள்ளன.

மேற்படி இரு குழுக்களையும் அமெரிக்கா தனது பயங்கரவாதப்பட்டியலில்இணைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை.
குறள்

வலம்புரி

## சுரண்டல் வர்த்தகம்

ஏ-9 கண்டி வீதி திறப்பதன் மூலம் குடாநாட்டு மக்கள் நன்மையடைவார்களெனஎதிர்பார்க்கப்பட்டபோதிலும் அதனையும் மீறி தென்னிலங்கை மக்களே கூடிய நன்மையைப் பெற்றுக் கொள்கின்றனர்

யாழ் மக்களிடமுள்ள சேமிப்புக்கள் இப்போது தென்னிலங்கையில் முதலீடுகளையும், வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தின்பொருளாதாரம் தனதுமண்ணில் தொழிற்சாலைகளையோ நிறுவனங்களையோ ஏற்படுத்தியதுகிடையாது. இதனால் தனியார் துறையினர் வேலையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்க முடியாத நிலையில் குன்றிப்போயுள்ளது.

இத்தகைய குறுக்கத்திற்கு யாழ்ப்பாணத் தனவந்தர்களின் குறுகிய மனப்பாங்கும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

இக்குறுகியமனப்பாங்கை தமக்கு சாதகமாகப்பயன்படுத்தும் நோக்கில் சில நிதி நிறுவனங்கள் செயற்பட்டன.

அதன் ஒருகட்டமாக யாழ்ப்பாண மக்களின் சேமிப்புக்களை, வைப்புக்களைத் திரட்டும் நோக்கில் அந் நிதிநிறுவனங்கள் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தன. அவற்றின் இலக்கு வெற்றியளிப்பதற்கு ஏதுவாக மக்களும் தம்மிடமிருந்த இலட்சங்களை பிரஸ்தாப நிதிநிறுவனங்களில் வைப்புச் செய்தனர் இவ்வைப்புக்கள் தென்னிலங்கையின் முதலீட்டிற்காக நகர்த்தப் படுகிறதே தவிர நிதிதிரட்டப்பட்ட இடத்தில் எந்த முதலீடுகளும் மேற்கொள்ளப் படுவதாகத் தெரியவில்லை.

இது ஒருபுறம் மறுபுறத்தில் தென்னிலங்கையின் உதிரி வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை தமது மடிகளில் கட்டத் தொடங்கிவிட்டனர். கண்டியில் ஆறு ரூபாவுக்கு விற்கப்படும் பூங்கன்றுகளையாழ்ப்பாணத்தில் இருநூறு ரூபாவுற்கு விற்கிறார்களெனின், அதனை இக்கோடை காலத்திலும் வேண்டுகிறார்களெனில், நிலைமை எப்படியென்பதை உணரமுடியும்.

யுத்தமூலம் அகதிவாழ்வும் ஒருபகுதி மக்களை வாட்டியெடுக்க இன்னொருபகுதியில்பூங்கன்றுகளும் பஞ்சணைக்கட்டிலும் விற்பனையாகிறதெனில் தமிழினத்தின் போக்குஎங்கே என்ற கேள்வியும் எழவே செய்கிறது.

# கனியுப்புக்களும், உயிர்ச் சத்துக்களும் நிறைந்த உணவினை உண்டு உடற்பலம் பெறுவோம்

## மருத்துவ விளக்கம்

காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு, கனியுப்புக்கள் உயிர்ச்சத்துக்கள் ஆகிய உணவு வகைகள் உடலிற்கு அத்தியாவசியம். நாம் உண்ணும் ஒவ்வொரு உணவுப் பொருளில் மேற்கூறிய எல்லா உணவு வகைகளும் இருப்பதில்லை. உதாரணமாக மரவள்ளிக் கிழங்கில் மாப்பொருள் உணவு மட்டும் உண்டு. கோதுமைமாவில்மாப்பொருளும் சிறிதளவுபுரதமும் உண்டு என்று பரிசோதித்து அறிந்து கொள்ளலாம். வெண்ணெய், சேங்காய் என்பவற்றில் கொழுப்பு உண்டு. ஆனால் அரிசியில் கொழுப்பு இல்லை. இவ்வாறு வெவ்வேறு உணவுவகைகள் உண்டு. அத்துடன் உணவுப்பொருட்களிலுள்ள உணவுவகைகளின் அளவுகளிலும் வித்தியாசமுண்டு.

### உயிர்ச்சத்துக்கள்

உயிர்ச்சத்துக்கள் ஏழு வகைப்படும். உணவுப் பொருட்களிலுள்ள உயிர்ச்சத்துகளின் அளவுகளும் வேறுபடும். இருபதாம் நூற்றாண்டு வரை, உயிர்ச்சத்துக்களின் முக்கியத்துவத்தை மனிதர் அறியாதிருந்தனர். ஏதோ ஒரு வகை உணவின் குறைபாட்டினால் நோய்கள் உண்டாவதை அவதானித்தனர். உதாரணமாக கடலில் நெடுங்காலத்தைக் கழிக்கும் மாலுமிகளுக்கு பல்நோய், முரசு கரைதல், சொறி, சிரங்கு ஆகியன உண்டாவதைக் கண்டனர். இந்த மாலுமிகள் கோதுமை அப்பத்தையும், உப்பிற்பதப்படுத்திய உணவுகளையும் மட்டும் உண்டு வந்ததே இத்தகைய நோய்களுக்குக் காரணம் என்று தெரிந்து கொண்டனர். எலுமிச்சம் பழச்சாற்றை உணவில் சேர்த்துக் கொண்டவர்களுக்கு அந்த நோய்கள் ஏற்படவில்லை. எனவே மாலுமிகளின் உணவில் எலுமிச்சப்பழச் சாற்றையும் சேர்த்துநோய்களைத் தடுத்துக் கொண்டனர். மேலும் தவிடு நீக்கிய அரிசியை உண்டசீனத்தொழிலாளர்களுக்கு நரம்புத்தளர்ச்சியும் அதைத் தொடர்ந்து பாரிசவாதமும் உண்டாயின. அரிசியை மாற்றிக் கொடுத்த பொழுது அந்நோய் ஏற்படாது தடுக்கப்பட்டது. இக்குறைபாடுகளைஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள் காபோவைதரேற்று, புரதம் கொழுப்பு, கனிப் பொருள்கள் ஆகிய வற்றைப் போன்று உயிர்ச்சத்துக்களும்அத்தியாவசியம் என்று கண்டு கொண்டனர்.

### மூலகங்கள்

கனியுப்புக்களிலும், புரதங்களிலுமிருந்து உடல் அதற்குத் தேவையான கல்சியம், பொஸ்பரசு, கந்தகம், செம்பு, அயடீன், சோடியம் போன்ற மூலகங்களைப் பெற்றுக் கொள்கிறது. பற்களையும், எலும்புகளையும் குருதியிலுள்ள செங்குருதிச் சிறு துணிக்கைகளையும், தைரொட்சினையும் உண்டாக்குவதற்கு மூலகங்கள் பயன் படுகின்றன. முக்கிய உறுப்புகளின் இளையங்களை ஆக்குவதற்கு இவைகள் எல்லாம் வேண்டியனவாயிருக்கின்றன. உணவிற் போதிய கனியுப்புக்கள் சேர்வதனால் பல பயன்கள் உண்டாகின்றன:

கல்சியம்- பற்கள் உருவாகவும், என்புகள் வன்மை பெறவும் நரம்புகளினதும், தசைகளினதும் சாதாரண தொழிற்பாட்டிற்கு உதவுகின்றது. பொஸ்பரஸ் -குழந்தைப்பருவத்திற் பற்கள் கோன்றப் பயன்படும். இரும்பு- செங்குருதிச் சிறு துணிக்கையிலுள்ள ஈமோ குளோபின் உண்டாவதிற் பங்கு பெறுகிறது. சோடியம்-குருதியினால் உபயோகிக்கப்படுகிறது. அயடீன்- தைரொயிட் சுரப்பிகளினாற் பயன்படுத்தப் படுகிறது. குளோரின் இரைப்பையிலுள்ள ஐதரோக் குளோரிக்கமிலத்தினால் பயன்படுத்தப் பெறும். 45 கிலோ நிறையுள்ள ஒருவரின் உடலில் காணபபடவேண்டிய மூலகப் பொருட்களின் அளவுகள் பின் வருமாறு எனலாம்:

ஒட்சிசன்-29-25 கிலோ, காபன்- 8.2 கிலோ, ஐதரசன்- 4.5 கிலோ, நைதரசன்- 1.3, கல்சியம்-1.0 கிலோ, பொஸ்பரஸ்-0.5 கிலோ, பொற்றாசியம்-0 15 கிலோ, கந்தகம்- 1 கிலோ.

### தவிட்டின் பயன்

எமது உடலில் ஏற்படும் முறிவு, நெரிவுகளையும், சுகப்படுத்துவதற்கு தவிட்டினை உபயோகிப்பதையும் நீங்கள் அறிவீர்கள். இதிலிருந்து நாம் ஒரு விஞ்ஞான அறிவைப் பெறுகின்றோம். தவிட்டுடன் கலந்த சோறு எமது உடலுக்குள் சென்று அங்குள்ள சமிபாட்டினால் ஏற்படும் நோவுகளையும். காயங்களையும் வராமற் செய்கிறது. இதற்கு முழு உதவி அளிப்பது அரிசியிலுள்ளதவிட்டுச் சத்தேயாகும்என்பதுமுற்றிலும் உண்மையாகும். இக்காரணங்களால் தவிடு ஓரளவு சேர்ந்த அரிசியை பாவிப்பதால்அரிசித் தேவை குறைந்து பணம் மீதமாகிறது. அரிசித் தட்டுப்பாடு ஏற்பட நியாயமில்லை, இதைவிட உடல்' சாமிபாடு, உகந்த முறையில் நடைபெறுகின்றது. உள்உடம்பில் ஏற்படும் புண்பாடுகள், நோக்காடுகள்முதலியவற்றை குணமாக்கி உடல் ஆரோக்கியம் ஏற்படுகிறது. அங்கு சுத்தமான காற்று உருவாகிறது, சுத்தமான காற்று உருவாவதால் நல் எண்ணங்கள் உருவாகி சேவை மனப்பான்மை வளருகிறது இத்தவிட்டை உண்ணும் மிருகங்களுக்கும் இவ்வாறே நல்ல காற்று உருவாவதால் குழறுபடியாக இடிக்கும் எண்ணம உருவாவதில்லை, ஆகவே, நீங்கள் எப்பொழுதும் ஓரளவு முற்றாகத் தவிடு நீக்காதஅரிசியை வாங்கிப் பாவிப்பதால், அனேக நன்மைகளை அடைவீர்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஏழுவகை உயிர்ச்சத்துக்களையும், அவைகள்எந்தெந்த உணவுப்பொருட்களில் உண்டு என்றும், ஒவ்வொருவகை உயிர்ச்சத்தின் குறைபாட்டினாலும், ஏற்படக்கூடிய நோய்களையும் எடுத்துக் காட்டிக் கீழே குறிப்பிடுகின்றோம.

### உயிர்ச்சத்து A, கரற்றீன்

முலையூட்டிகளின் ஈரல் மீனின்ஈரல், ஈரலெண்ணெய், பால், பாற்கட்டி, முட்டை, பச்சிலைகள், பச்சை நிற மரக்கறிகள், தக்காளி, கரற், மஞ்சள் நிறப்பழங்கள முதலிய வற்றில் உள்ளன. வளர்ச்சி, நோய்க்கிருமிகளை எதிர்க்கும் தன்மை அதிகரித்தல. தோலைப் பேணல், இரவிற்பார்வை தெளிவாதல், போன்ற பயன்கள் ஏற்படும். இதன் குறைபாட்டினால் வளர்ச்சிகுன்றுதல், தொற்று நோய்களை எதிர்க்கும் சக்தி குறைதல், கண்ணில் வெள்ளைபடர்தல் மாலைக்கண் கண்வீக்கம் குருட்டுத்தன்மை தோல்வரட்சி என்பன உண்டாகும்.

### உயிர்ச்சத்து B-1 தயமின்

கடலுணவு, பால், மாட்டிறைச்சி, கோழியிறைச்சி, பன்றியிறைச்சி, பச்சைநிறக்காய்கறிவகைகள உலர்ந்த முழுத் தானியங்கள் ஆகிய வறறில் உண்டு. வளர்ச்சி, இதயம் நரம்பு, தசைகள் என்பவற்றின்சீரான தொழிற்பாடு, உணவில் விருப்பம், உணவு சமித்தல் ஆகிய பயன்பாடுகளைக் கொண்டது. இதன் குறைபாட்டினால் வளர்ச்சி குன்றுதல், பெரிபெரி நோய், நரம்புத் தளர்ச்சி, இதய அடிப்பிற் தளர்ச்சி, உணவில் வெறுப்பு, உடல் நலிவு. வயிற்றுக் கோளாறு என்பன ஏற்படும்.

### உயிர்ச் சத்து B.2 இரபோபிளேவின்

இது பால், முட்டை, மதுவம், ஈரல், கோழியிறைச்சி, பச்சைநிறக் காய்கறி, தானிய வகைகளில் உண்டு. வளர்ச்சி, வாய், தோல் என்பவற்றைப் பேணல், கண்ணின் சீரான தொழிற்பாடு போன்ற பயன்கள உண்டு. இதன் குறைபாட்டினால் வளர்ச்சி குன்றுதல், பார்வை குறைதல், சண்பீழை சாறல், அகால முதுமை என்பன ஏற்படும்.

### உயிர்ச் சத்து 'E' அஸ்கோபிக்கமிலம்

காய்கறிவகைகள், பழங்கள் விசேடமாகத் தோடை, எலுமிச்சை வகை, அவிக்காத சரட் கிழங்கு, முருங்கையிலை ஆகியவற்றில் உண்டு. வளர்ச்சி, நோய்க்கிருமிகளை எதிர்க்கும் தன்மை அதிகரித்தல், இரத்த சுத்தி, வாய், முரசு, பல் என்பவற்றைச் சீராக வைத்திருத்தல் என்பன இதன் பயனாகும். இதன் குறைபாட்டால் வளர்ச்சி குறைதல், கேவிநோய், முரசு கரைதல், கடைவாய்ப் புண்கள், புண்கள் விரைவில் மாறாமை போன்றன உண்டாகும்.

### உயிர்சத்து D

இது மீனெண்ணெய், ஈரல், முட்டை. வெண்ணெய், சூரிய ஒளி ஆகிய வற்றிலுள்ளது. பல், எலும்பு என்பவற்றின் வளர்ச்சியும், வன்மையும்உண்டாதல் இதன் பயனாகும். இறிற்கெற்சுநோய், பிற எலும்புநோய்கள், பல் நோய்கள, பற்சூத்தை, வளையக்கூடிய எலுப்பு தொகுதி, கணச்சூட்டு நோயகள் இதன் குறையாட்டால் ஏற்படுகின்றன.

### உயிர்ச்சத்து E

இது பச்சை நிறக்காய் கறிகள, பால் வெண்ணெய், வித்துக்கள், முளைக்குப் கோதுமை சோளம்வித்துக்களில் உண்டு. இனவிருத்திக்கு இன்றியமையாதது. பறுவிலங்குகளில் மலட்டுத்தன்மை, மனிதனின் மலட்டுத்தன்மை ஆகியவை இதன் குறைபாட்டாலேற்படும்.

### உயிர்ச்சத்து F

இது பச்சை நிறக்காய் கறிகள, தக்காளி, சோயா, அவரை, பால், முட்டைமஞ்சட்கரு போன்றவற்றில் உள்ளது. கல்லீரல் சீராகத் தொழிற்படுதல், குருதியுறைதல் போன்ற பயன்கள் இதனால் ஏற்படுகின்றன. இதன் குறைபாட்டால் குருதியின் ஒழுங்கு திரளலைக்குறைத்துக குருதிப் பெருக்கை ஏற்படுத்தும்.

நன்றி
மருத்துவக்குறிப்புகள்
அறத்தமிழ்ஞானம்

## தினசரி தியானம்

## இந்தியப் பண்பாடு

இந்தியப் பண்பாடு உன்னதமான ஆன்மீகத்தை அடிப்படையாகக்கொண்டது இந்துக்களின்இலட்சியம் தன்னை அறிதல், அதாவது இறை உணர்வாகும். மிக உயர்ந்த இறைவனைப்பற்றிய அறிவாகிய சிகரத்தையும், குறையில்லாவாழ்க்கையின்எல்லையையும்ஆன்மீகச் சிறப்பியல்புகளின் உச்சியையும் அடைவதுதான் ஞானிகள், ரிஷிகள், துறவிகள் அல்லது சாதகர்களின் முனைப்பான முயற்சியாக இருந்தது பிறப்பு மற்றும் இறப்பு ஆகிய தளைகளிலிருந்து ஒருவர் தம்மை விடுவித்துக்கொள்வதிலேயே விடுதலை அமைகிறது. இந்தியப் பண்பாட்டின் கோட்பாட்டை விளக்கும்சொல் பிறவித்துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதே ஆகும்.

சுவாமி சிவானந்தர்

## கிரிக்கெட்

### அரையிறுதி ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கிரிக்கெட் அரையிறுதி ஆட்டங்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமைஇடம் பெறவுள்ளன.

இந்த அரையிறுதி ஆட்டங்களில் 'ஏ' குழுவில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி எதிர் 'பி' குழுவில் இரண்டாம் இடம்பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, யாழ். மத்தியகல்லூரி மைதானத்திலும்,

'பி' குழுவில் வெற்றி பெற்ற யாழ். இந்துக் கல்லூரி அணி எதிர் 'ஏ' குழுவில் இரண்டாம் இடமபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணி, யாழ். இந்துக்கல்லூரி மைதானத்திலும் மோதவுள்ளன. (உ)

# சமாதானத்தை ஏற்படுத்த அரசும் எதிர்க்கட்சியும் ஒன்றுசேர வேண்டும்

## தேசிய மகா சங்கப்பேரவை வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்துக்கு மாத்திரம் உரியதல்ல எதிர்க்கட்சிக்கும் அப்பொறுப்பு உரியது. இவ்விடயத்தில் இரு தரப்பினரும் ஒன்றாகச் செயற்பட வேண்டும்.

இவ்வாறு தேசிய மகாசங்சப் பேரவை வெளியிட்ட செய்திக் குறிப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாட்டில் சமாதானத்தை தோற்றுவிக்க அரசாங்கமும் எதிர்கட்சியும் ஒன்றுசேர வேண்டிய காலம் நெருங்கி விட்டது.

இவ்விடயத்தில் பிரதான இரு கட்சிகளும் நேர்மையாக நடக்க வேண்டும்.

நாட்டில் இன்று எல்லாவிடயங்களுக்கும் மேலாக சமாதானமே தேவைப்படுகிறது. சகல மக்களும் இதற்காகவே ஏங்குகிறார்கள்.

கடந்த இருதசாப்தங்களாக சமாதானத்தை ஏற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பலனளிக்கவில்லை

தற்பொழுது அதற்கான புதிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதனைச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

இவ்விடயத்தை அரசியலாக்கி அதிகார வெறியின் அடிப்படையில் குறுகிய அரசியல் வேற்றுமைகளில் ஈடுபடுதல் நாட்டிற்கு பேரழிவைத் தரும் என்றும் அவ்வறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

### நல்லூரில்

இதேவேளை நேற்றும் அதிகாலை வேளை ஆலயத்தில் அங்கப்பிரதிஷ்டை செய்து கொண்டிருந்த பக்தர்கள் சிலரும் நாயின் கடிக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நல்லூர் ஆலயச்சூழலில் காணப்படும் கட்டாககாலி நாய்களைக்கட்டுப்படுத்த யாழ்.மாநகரசபை நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

### வாகரையில்

மட்டக்களப்புக்கும் இடையிலான படகுச்சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதையடுத்து வாகரை இறங்குதுறைக்கு அண்மையாக சர்வதேச யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் அலுவலகம் ஒன்றும் திறக்கப்படவுள்ளது. (த)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த, மாதகல் சென்ஜோசப் வித்தியாலயத்தில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளதால், பொருத்த மானவர்கள் அப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியுமென வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்எஸ்.இராஜையா கோரியுள்ளார்.

மேற்படி பாடசாலையின் அதிபர் எஸ். அழகரட்ணம் விரைவில் ஓய்வுபெற இருப்பதால் அப்பதவியை நிரப்புவதற்குரிய வகையில் எதிர்வரும் 30ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ)

## ஆசிரியர் தரவட்ட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயப்பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 11வரையிலானவகுப்புக்களில் ஆங்கிலம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்குமான இடைநிலை ஆசிரியர் தரவட்ட செயலமர்வொன்று நாளை யாழ்.மத்தியகல்லூரியில்நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் சகல ஆங்கில ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தீவக வலய கல்விப்பணிப்பாளர் பி.விக்கினேஸ்வரன்கேட்டுள்ளார். (இ-5)

அன்புவாசகர்களே,
நாளை புதன்கிழமை
**சங்குநாதம்**
வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம்.
(ஆ-ர்)

### புலிகளின் கடற்

டிருந்தனர். நேற்றும் இப்பயணம் தொடர்ந்து நடைபெற்றது.

இந்நிலையில் இப்பயணம் கடல் வழி ஒப்பந்தத்தின் பிரகாரம் கடலில் 5முதல் 8கடல் மைல் தூரத்திலேயே இடம் பெற வேண்டும்.

எனினுமவிடுதலைப்புலிகள் கடற்பயணத்தின் போது ஒரு கடல்மைல் தூரத்திலேயே பயணம் செய்துள்ளதாக கடற்படையினர் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

அத்துடன் நேற்று மட்டக்களப்பில் இருந்து முல்லைத்தீவுக்கு சென்ற புலிகளின் படகுகள் இரண்டரை கடல் மைல்தூரத்தில்பயணம்செய்ததாகவும் அம்முறைப்பாட்டில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

### அதிகாரத்தை

மரப்பன ஆகியோர் கூட்டாகப் பேசி எடுத்துள்ளனர்.

இந்த முடிவின் அடிப்படையிலேயே, அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்படாவிடின் பொதுத் தேர்தலை நடத்துவதென்ற முடிவு எடுக்கப்பட்டது.

பாராளுமன்றத்தைக்கலைக்கும் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதனால் டிசம்பர் 5ந்திகதிக்கு பின்னர் பாராளுமன்றம் எந்நேரமும் கலைக்கப்படலாம் என்ற அச்சம் அரசாங்கத்துக்கு உள்ளது.

இந்நிலையில் அரசியல் யாப்பு சீர்திருத்தம் மூலம் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்க ஐக்கியதேசிய முன்னணி தீவிர நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

இதன் அடிப்படையில் அரசியல் அமைப்பு சீர்திருத்தத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் பெற்றுக்கொள்ள எதிரணியினரை தம் வசம் இழுக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது:

இது தொடர்பாக எதிர்க்கட்சிஉறுப்பினர்களுடன் கலந்துரையாடல்கள், இரகசியப் பேச்சுக்களும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசின் சமாதான நடவடிக்கைகளை ஆதரிப்பதாகவும், பாராளுமன்றத்தை ஒரு போதும் கலைக்கப் போவதில்லை என்றும் உறுதியளித்து வருகின்றார்.

இதுவும் ஒருவகை அரசியல் தந்திரோபாயம் என்றும், ஜனாதிபதியின் உறுதி எந்நேரத்திலும் குலையலாம் என்றும்,

இதற்கான மாற்று ஏற்பாட்டை நகர்த்துவது அவசியமென்றும் அரசாங்கத் தரப்பால் நோக்கப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## சுவாமி சச்சிதானந்தா சமாதியடைந்தார்

சுவாமி சச்சிதானந்தா சென்னை ஆச்சிரமத்தில் நேற்று சமாதி அடைந்துள்ளார்சமாதிஅடையும்போது சுவாமிகளுக்குவயது88சுவாமி இலங்கையில் திருகோணமலையை கண்டி ஆகியஇடங்களில் பலவருடங்கள் தங்கியிருந்து சமயப்பணியாற்றியவர்இதேவேளை அண்மையில் வெளியாகியுள்ள நடிகர் ரஜினிகாந்தின் பாபா திரைப்படத்திற்கும்சுவாமிகள ஆசி வழங்கியமை இங்குகுறிப்பிடத்தக்கது. (இ)

### 500 பேர்

ரை சம்பந்தப்பட்ட பகுதிக்குள் அனுமதிப்பதில் படையினர் தாமதப் போக்கைக கடைப்பிடித்தனர்.

அங்கு சென்றவர்கள் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அப்பகுதிக் கட்டளை அதிகாரியுடன் கலந்துரையாடுகையில்,

பாடசாலைக்கு முன்னாள் உள்ள சோதனைச்சாவடி அகற்றப்பட்டுமாணவர்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு வழிவகை செய்யவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்

இது தொடர்பாக இன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவுடன் அவர் பேசவுள்ளதாகவும் குறிப்பிட்டார். (உ-12-43)

### புலிகளின்

சேர்ந்த மக்கள் கண்காணிப்புக்குழுவிடம முறைப்பாடு செய்துள்ளனர்.

ஆலய பூசகர் மற்றும் பொது மக்கள் இராணுவத்தினரால் எச்சரிக்கை செய்யப்படுவதாகவுமமயிலம்பாவெளி சிறி முருகன் ஆலய எல்லைக்குள் இறைச்சி மற்றும மீன் உணவுகளை படையினர் எடுத்துச் செல்வதாகவும அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

### இடைக்கால

கப்பட அரச தரப்பில் ஆலோசிக்க படுவதாகவும் இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து ஊகங்கள் வெளியாகியுள்ளது. (இ)

### இலங்கையின்

தற்கு முன்வந்துள்ளன.

இந்நிலையில் நாட்டின் வளங்களை ஒன்றுதிரட்டி பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் தன்னை அர்ப்பணித்துள்ளது என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (த)

**வாடகைக்கு**

யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் சிற்றி போய் தையலகத்திற்கு அருகில் உள்ள இரு பெரிய கடைகளும் அதற்குப் பின்னால் உள்ள ஸ்ரோர் அதனுடன் கூடிய சிறிய கடை என்பன வாடகைக்கு உண்டு.

**தொடர்பு;**
இராசையா சாவித்திரி
65, சிவன், பண்ணை, வீதி
யாழ்ப்பாணம்
(5782)

**மக்கள் வங்கியின் தங்கக்கடன்சேவை**

**அச்சுவேலி மக்கள் வங்கியிலும்**

மக்கள் வங்கியின் சேவையின் ஓர் அங்கமான அடகுச்சேவை அச்சுவேலி மக்கள் வங்கிக்கிளையில் நாளை (21. 08. 2002) புதன்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் எமது பிரதேச முகாமையாளர் அவர்களால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்பதனை வாடிக்கையாளர் அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

(சி 4865) **பிரதேச முகாமையாளர்.**

**லிகிதர் தேவை**

சுன்னாகத்தில் இயங்கும் மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையத்திற்கு 50 வயதிற்குட்பட்ட அனுபவமுள்ள ஆண் லிகிதர் தேவை. உங்கள் விண்ணப்பத்தை 26.08.2002 இற்கு முன்னர் கீழ் காணும் முகவரியில் நேரில்ஒப்படைக்கவும்.

சூட்டி மாஸ்டர்
207, K. K. S ROAD
சுன்னாகம்

(சி-4866)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 20-08-2002இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது;